# திருமூலர் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

*முனைவர் த. சந்திரகுமார்*
உதவிப்பேராசிரியர் - தமிழ்த்துறை
அய்ய நாடார் அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி
https://doi.org/10.5281/zenodo.15323801

## முன்னுரை

*கடவுளைக்காணமுயற்சிசெய்பவர்களைப் பக்தர்கள் என்றும், கடவுளைக் கண்டு மனம் தெளிவானவர்களைச் சித்தர்கள் என்றும் கூறுவர். அதிசய ஆற்றல் பெற்றவர்களே சித்தர்கள். இறப்பை வென்று கூடு விட்டுக் கூடு பாயும் வல்லமை உடையவர்களாகவும் திகழ்ந்தனர். சித்தர்கள் மரணத்தை வென்று எதையும் சாதிக்கும் வல்லவர்கள் என்று பாரதியார் பாராட்டியுள்ளார்.*

***செத்தவர் தம்மை எழுப்பித் தருகின்ற***
***சித்தர் பிறந்த தமிழ்நாடு***

*என்று சித்தர்களைப் புகழ்ந்து பாடியுள்ளார். சிந்தையில் தெளிவைத் தந்து மனிதன் வாழ வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளை உணர்த்தும் நிலையில் அமைந்தவை சித்தர் இலக்கியங்கள். அவற்றுள் மனிதனைச் சீர்படுத்தும் முதன்மையான இலக்கியமாகத் திகழ்வது திருமூலர் அருளிய திருமந்திரம் என்னும் நூலாகும். திருமூலரின் திருமந்திரத்தில் இடம்பெறும் வாழ்வியல் நெறிமுறைகளைக் கண்டறிவதே இவ்ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

## திருமந்திரம்

*சிவநெறியை உணர்த்தும் தலைசிறந்த நூல்களுள் ஒன்றாகத் திருமந்திரம் திகழ்கிறது. சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகக் கருதப்படும் திருமந்திரத்தை இயற்றியவர் திருமூலர் ஆவார். ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் மூவாயிரம் பாடல்களைத் திருமூலர் பாடியுள்ளார். சைவத் திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகப் போற்றப்படுகிறது. திருமந்திரத்தில் ஒன்பது உட்பிரிவுகள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் தந்திரம் என்பது பெயர். இதில் 232 அதிகாரங்கள் உள்ளன. இந்நூல் திருமந்திர மாலை, தமிழ் மூவாயிரம் என்னும் பெயர்களால் சிறப்பிக்கப்படுகிறது. தொல்காப்பியர் மந்திரம் குறித்து,*

***நிறைமொழி மாந்தர் ஆணையற் கிளக்கும்***
***மறைமொழி தானே மந்திரம் என்ப***
***(தொல்காப்பியம், பொருள், செய்யுளியல் : நூ., 171)***

*என்று கூறுகிறார். நிறைமொழி உடைய சான்றோர்களின் கட்டளையிலிருந்து வெளிவரும் மறைவான சொற்களை மந்திரம் என்கிறார்.*

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவரும் தெய்வ சக்தி உடையவர்கள் ஆவார். அவ்வாறு துறவறவாழ்வின்நெறிமுறைகளைப்பின்பற்றி வாழ்ந்தவர்களில் முதன்மையானவர்கள் சித்தர்கள். ஐம்புலன்களை அடக்கி உலகப் பற்றுக்களைத் துறந்து வாழ்ந்த சித்தர்கள் மொழிகளும் மறைமொழிகளாகும்.*

***நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து***
***மறைமொழி காட்டி விடும் (குறள்: 28)***

*என்று வள்ளுவரும் தொல்காப்பியர் சொன்னதைப் போலவே மறைமொழியை மந்திரம் என்று கூறுகிறார். மந்திரம் என்பது நினைப்பவரைக் காப்பது ஆகும். அவ்வகையில் திருமூலர் இயற்றிய திருமந்திரத்தில் காணலாகும் வாழ்வியல் நெறிகளைக் கண்டறிவோம்.*

## அறம்

*திருமந்திரம் வாழ்வியல் நெறிமுறைகளைப் போதிக்கும் ஒரு சித்தர் இலக்கியம் ஆகும். மனிதனின் வாழ்வியல் நெறிமுறைகளில் முதன்மையானது அறம் ஆகும். வள்ளுவர்கூட*

*திருக்குறளை அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று பிரிக்கும் பொழுது அறத்திற்கே முதலிடம் கொடுத்துள்ளார் மேலும், அறன் வலியுறுத்தல் என்னும் தனி அதிகாரமும் படைத்துள்ளார்.*

***அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்***
***புறத்த புகழும் இல (குறள்: 39)***

*அறச் செயல் வழியாக நாம் பெறுவதே உண்மையான இன்பமாகும். மேலும், அந்த அறச் செயல் வழியாகப் புகழும் கிடைக்கும். அறச்செயலுக்கு அப்பாற்பட்ட மறச் செயலால் துன்பம் வருவதோடு புகழும் கிடைக்காது என்கிறார் வள்ளுவர். அதுபோல திருமூலரும் தம்மால் இயன்றவரைப் பிறருக்கு உதவி செய்ய வேண்டும் என்கிறார்.*

***யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை***
***யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை***
***யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி***
***யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே***
***(திருமந்திரம் பா . எ. 252)***

*என்ற திருமந்திரப் பாடல் அடிகள் மனிதனின் அறச் செயல்களைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன இறைவனுக்கு எங்கும் எளிதாகக் கிடைக்கும் ஒரு பச்சிலையை இட்டு வழிபடுதல் என்பது அடியவர்கள் அனைவரும் செய்யக்கூடியதாகும். அது போலப் பசுவிற்கு ஒரு வாய் உணவு கொடுத்தல் என்பது எளிதான ஒன்றாகும். பசியால் வாடும் ஏழை எளிய மக்களுக்கு ஒரு கைப்பிடி உணவினைக் கொடுத்து உண்ணச் செய்தல் சிறப்பானதாகும். பிறரிடம் இனிய சொற்களைப் பேசுதல் யாவர்க்கும் செய்யக்கூடிய ஒரு சிறந்த செயலாகும் என்று மனிதனுக்கே உரித்தான உன்னதமான அறம் என்னும் வாழ்வியல் நெறிமுறையைக் கூறுகின்றார் திருமூலர். மேலும், உணவு உண்பதற்கு முன்பாகப் பசியோடு யாராவது வருகிறார்களா? என்று பார்த்துவிட்டு உணவு உண்ண வேண்டும். நமக்குப் பிடித்தவர்கள், பிடிக்காதவர்கள், உறவினர்கள், உறவினர் அல்லாதவர் என்று எவ்வித பாகுபாடும் பார்க்காமல் உணவைப் பிறருக்குக் கொடுத்து உண்பதே தலையான அறமாகும். சாப்பிடாமல் மீதம் வைக்காமல் அதை உடனே பசியோடு இருப்பவர்களுக்குக் கொடுத்து உதவ வேண்டும்.*

***ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்***
***பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்***
***வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்***
***காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே***
***(திருமந்திரம் பா . எ. 250)***

*என்னும் பாடலடிகள் தர்மம் செய்வதன் பொருளைக் கூறுகின்றது. உணவின் மீது அதிக ஆசை வைக்கக்கூடாது. பசியோடு இருந்தாலும் அவசர அவசரமாக வேகமாக உணவினை உண்ணக்கூடாது. காக்கை பசியோடு இருக்கும் போது, கரைந்து பிற காகங்களை அழைத்து ஒன்றாக உண்பதைப் போல பிறருக்கு உணவைக் கொடுத்து உண்ண வேண்டும். இதனையே வள்ளுவரும்,*

***காக்கை கரவா கரைந்துஉண்ணும் ஆக்கமும்***
***அன்ன நீரார்க்கே உள (குறள்: 527)***

*என்று பாடுகிறார். ஆதலால் உயிர் இருக்கும் பொழுதே மனிதன் அறவழியில் வாழ்வது சிறந்த வாழ்க்கை நெறியாகும்.*

**அன்பு**

*இறைவனை வழிபடுவதற்கு அன்பு ஒன்றே போதும் அன்பிற்கு மட்டுமே இறைவன் அடிபணிவான். அன்பு இல்லாதவர்கள் எல்லாப் பொருளும் தனக்கே வேண்டும் என்னும் எண்ணம் உடையவராக இருப்பார்கள். அன்பு உடையவர்கள் எல்லாப் பொருளும் எல்லோருக்கும் பொதுவானது என்னும் உயர்ந்த எண்ணம் உடையவராக இருப்பதுடன் தன் உடலையும் பிறருக்கு வழங்க தயாராக இருப்பார்கள்.*

***அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்***
***என்றும் உரியர் பிறர்க்கு (குறள்: 72)***

*என்று அன்பின் சிறப்பினை வள்ளுவர் பெருந்தகைப்பாடுகிறார். அதுபோலத் திருமூலரும் அன்பின் மேன்மையை,*

***அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்***
***அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்***
***அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்***
***அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே***
***(திருமந்திரம் பா . எ. 270)***

என்று பாடுகிறார். அன்பு என்று அழைக்கப்படுகின்ற உணர்வும் சிவம் என்று அழைக்கப்படுகின்ற இறைவனும் வேறு வேறு என்று சொல்பவர்கள் அறிவில்லாதவர்கள். அசையும் பொருள், அசையாப் பொருள், ஓர் அறிவு முதல் ஆறறிவு வரை உள்ள அனைத்து உயிர்கள் மீதும் செலுத்தப்படும் எதிர்பார்ப்பில்லாத தூய்மையான அன்பு தான் சிவம் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. இறைவனது திருவருளால் தமக்குள்ளும் பிறருக்குள்ளும் இருந்து வெளிப்படும் தூய்மையான அன்பு தான் சிவம் என்பதை அறிந்து உணர்ந்த பின் அந்த அன்பே சிவமாக அவருடைய உள்ளத்தில் அமர்ந்து இருப்பார். அன்பு தான் கடவுள் என்பதை ஆணித்தரமாகச் செ ால்கிறார் திருமூலர். தினமும் கோவிலுக்குச் செல்வது கடவுளை வழிபடுவது இவற்றைத் தவறாமல் செய்துவிட்டு பிற உயிர்களிடம் அன்பு இல்லாமல் இருந்தால் இறைவனை வழிபட்டும் புண்ணியமில்லை. பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்கள் அனைவரும் அன்பு நெறியில் உறுதியாய் இருந்தவர்கள். சிவலிங்கத்திற்குத் தன் கண்களையே பெயர்த்துக் கொடுத்த அன்பு கண்ணப்ப நாயனாருடையது.

***என்பே விறலாக இறைச்சி அறுத்திட்டுப்***
***பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்***
***அன்போடு உருகி அகங்குழை வார்க்கன்றி***
***என்பொலா மணியினை எய்த வொண்ணாதே***

***(திருமந்திரம் பா . எ. 272)***

என்ற பாடல் அடிகளில் அன்பின் மேன்மையைத் திருமூலர் உணர்த்துகின்றார். உடல் எலும்புகளை விறகாக்கி எரியும் நெருப்பில் தசைகளை அறுத்துப் போட்டு வறுத்தாலும் அவர்களிடம் உண்மையான அன்பு இல்லை என்றால் இறைவனை அடைய முடியாது. இறைவனை அடைவதற்கு மிகச்சிறந்த வழி உண்மையான அன்பே ஆகும் என்பதை ஆய்ந்து அறிய முடிகின்றது.

## நிலையாமைச் சிந்தனைகள்

மனிதன் வாழ்கின்ற இல்வாழ்க்கையானது நிலையற்றது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். நாம் பெற்ற செல்வம், இளமை, உடல், உயிர் ஆகியன நிலைத்து நிற்பதில்லை. திருமூலர் நிலையாமைச் சிந்தனையை உணர்த்த பல பாடல்களைப் பாடியுள்ளார்.

***ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்***
***பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்***
***சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு***
***நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே***

***(திருமந்திரம் பா . எ. 145)***

என்ற பாடல் அடிகள் மூலம் உடல், உயிர், இளமை, செல்வம் எல்லாம் ஒரு மனிதனுக்கு நிலையற்றது என்று கூறுகிறார். உயிர் உடலில் இருக்கும் வரை அவனுடன் வாழ்ந்த மனைவி, குழந்தைகள், உறவினர்கள், ஊரார்கள் என்று அனைவரும் ஒன்றாக வாழ்ந்தவர்கள். அவன் இறந்து போன பின் ஒன்றாகக் கூடி சத்தம் போட்டு புலம்பி அழுகின்றனர். அவன் பேரைச் சொல்லாமல் பிணம் என்று சொல்கின்றனர். அந்த உடலை எடுத்து சுடுகாட்டில் வைத்து எரிக்கின்றனர். அந்த உடலைத் தொட்டதைத் தீட்டு என்று நினைத்து ஆற்றில் மூழ்கி எழுந்து, அவனைச் சில நாட்களில் மறந்து விடுகின்றனர். எனவே, நிலையாமையே நிலை பெற்றிருக்கின்ற இவ்வுலகில் மக்கள் செய்ய வேண்டிய செயல்களைப் புலப்படுத்துகிறார். மனிதர்கள் உண்மையாக வாழ வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளை எடுத்துக் கூறுகிறார் திருமூலர்.

## முடிவுரை

இலக்கியங்கள் சமயத்தை வளர்த்தது மட்டுமில்லாமல் மக்கள் ஒழுக்கமாக வாழ்வதற்குத் தேவையான நல்ல சிந்தனைகளையும் முன்வைக்கின்றன. அறவாழ்வில் வாழ்வதன் மூலம் இறைவனின் பாதத்தை அடைய முடியும். அன்பினால் மட்டுமே இறைவனின் மனதில் குடியேற முடியும். செல்வம், உடல், உயிர், இளமை போன்றவை நிலையாமை என்பதை உணர்ந்தால் மட்டுமே இவ்வுலகில் நிம்மதியாக வாழ முடியும். திருமூலர் உலக மக்களின் நலன் கருதி சில வாழ்வியல் நெறிமுறைகளைத் திருமந்திரத்தில் பதிவு செய்துள்ளார் என்பதை ஆய்ந்து அறிந்து கொள்ள முடிகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. வ. சிவசங்கரன் (உ. ஆ.,), திருமந்திரம் மூலமும் உரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2007.
2. அ. மாணிக்கம் (உ. ஆ.,), திருமந்திரம் மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம் சென்னை, 2002.
3. இ. கோமதிநாயகம், சித்தர்கள் காட்டும் வாழ்வியல் கல்வி, சாரதா பதிப்பகம், சென்னை, 2008.
4. ஞா. மாணிக்கவாசகன், திருமந்திரம் மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை, 2022.
5. முகிலை இராசபாண்டியன், திருக்குறள் தெளிவுரை, முக்கடல் பதிப்பகம், சென்னை, 2020.
6. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் பொருளதிகாரம் மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், திருவையாறு, 2018.
7. தமிழண்ணல் (உ. ஆ.,), தொல்காப்பியம் பொருளதிகாரம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.